1974 ஏப்ரல் 8]

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: இருக்கிற சிக்கல் என்னவென்றால், வெளிநாடு நிபுணர்கள் ஆலோசனைப்படி பொருத்தப்பட்டதாகும். திடீரென்று நீடில் சரியாக வேலை செய்யவில்லை என்றால் அது இந்த நாட்டில் சமயத்தில் கிடைப்பது சிரமம். வெளி நாட்டிலிருந்துதான் வரவழைக்கவேண்டும். நடைமுறைச் சிக்கல்களால் காலதாமதம் ஆகிறது. அந்தக் கால தாமதத்தைத் தவிர்ப்பதற்கு எந்தெந்த அளவில் முயற்சிகள் எடுக்க வேண்டுமோ அவைகளை எல்லாம் எடுத்து வருகிறோம்.

Deers in Point Calimere forests

* 778 Q.—THIRU N. KITTAPPA: Will the Hon. the Minister for Electricity be pleased to state tre taken by the Government to preserve the deers in the Point Calimere forests near Vedharanyam in Thanjavur district?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: வன அலுவலர்கள் சற்று அதிகமாக நியமிக்கப்பட்டுள்ளார்கள். சரணாலயத்திற்குச் சென்றுவிட்டு வெளியே வருகிறவர்களிடம் பரிசோதனை செய்யப்படுகிறது. மேலும் அந்தப் பகுதியில் வனவிலங்குகள், பறவைகள் இவற்றைச் சுடுவது சட்டம் மூலம் தடுக்கப்படுகிறது.

Hand-pounded rice.

* 779 Q.—THIRU N. KITTAPPA: Will the Hon. the Minister for religious endowments be pleased to state the places where mills for the production of hand pounded rice are now run by the Government?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: அரசு கைக்குத்தல் அரிசி தயாரிப்பு நிலையம் எதும் நடத்தவில்லை.

திரு. தி. பொன்னுமலை: கைக்குத்தல் அரிசி என்று சொல்லிக் கொண்டே மெஷினில் அறைக்கிற அரிசியைப் பலயிடங்களில் சப்ளை செய்கிறார்கள். சென்ற ஆண்டு கூட இதுபற்றி சேலம் மாவட்டத்தில் நான் ஒரு புகார் கொடுத்தேன். அதுபற்றி இதுவரையில் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. ஆகவே, அதுபற்றி ஆலோசித்து நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: அப்படி கலப்படம் செய்வார்களானால் நிச்சயமாக தகுந்த நடவடிக்கை எடுக்கலாம். எந்த இடத்தில் அப்படிச் செய்கிறார்கள் என்பதுபற்றி உறுப்பினர் அவர்களை தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.